OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
10 APR 1911
MADRAS.


உ

சிவமயம்

# திரிசிராகிரியில் அடிவாரம் ஈசானப் பாகத்தில்
# எழுந்தருளி விளங்கும்
# ஹரிஹரப்புதல்வராகிய
# தேசயிக்கையனார் சரித்திர சுருக்கமும்
# வன்னியடி ஸ்ரீகருப்பண்ண சுவாமிகள்
# சரித்திர சுருக்கமும்.

இஃது
ஷெ. தேசயிக்கையனாரை பூசித்துவரும்
சு. தாயுமானபிள்ளை அவர்கள்
சொல்ல எழுதி

திருச்சி புஸ்தகஷாப்பு
தி. சபாபதிபிள்ளையால்
தமது ஸ்ரீமட்டுவார் குழலாம்பாள்
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது
1911



35447

உ

சிவமயம்.

திரிசிரபுரம் மலைக்கோட்டை ஈசானியபாகத்தில்

எழுந்தருளி விளங்குகின்ற

ஹரிஹரபுதல்வராகிய தேசுமிக்கையனார்

# சரித்திர சுருக்கம்

...OF THE ... REGISTERED ... APR 191... MADRAS

ஷை திரிசிராமலையில் மாத்ருபூதேஸ்வரர் மலைக் கொழுந்தாய் உற்பத்தியான காலத்திலேயே ஷை தேசுமிக்கைய்யனாரை ஆலயத்துக்கு விசாரணை கர்த்தராய் நேமித்தது ஷை கைய்யனார் சகல விசாரணைகளுந் தானே நடத்திக்கொண்டு வருங்காலத்தில தொழிலாளிகள் ஒருபதார்த்தத்தை திருடிக்கொண்டுபோகவெத் தனித்தால் கொண்டு போக வொட்டாமல் அந்தபதார்த்தத்துடனே அவனை ஒரு தூணோடு அவர்கள்கட்டினாற் போல்நின்றுபோய்விடுகிறது அந்தத்திருட்டு அதிகாரிகள் முதலாகிய யாவருக்கும் தெரிந்து அந்த திருடனுக்கு தகுந்ததண்டனைகள் செய்து ஷை தேசுமிக்கையனாரை பிரார்த்தித்தபிறகு அந்த திருடன் அந்த தூண்கட்டு நீங்கிவிடுதலையாகிறது வழக்கமாயிருந்தது.

நித்தியபடி அர்த்தசாமம் முடிந்தபிறகு கம்பத்தடிக்கு அடுத்த வாசப்படி கதவை பூட்டி அந்த சாவியை தேசுமிக்கையாவென்று ஒருசத்தம் போட்டு அர்

க்கதவின் இடுக்கில் தானே சாவியை வைத்துப்போகிறவழக்கமேதவிர ௸கோவில் சாவியை அதிகாரிகள்வீட்டுக்குகொண்டுபோகிறவழக்கமில்லை மறுநாள் காலையில் திருமஞ்சனம் வந்தபிறகு கோவில் திறப்பதற்காக அவருவந்தவுடனே தேசுமிக்கையாவென்றுஒருசத்தம்போட்டால் அந்தசாவி அந்தயிடத்திலேயே வந்திருக்கும் அதையெடுத்து திரந்துயாவரும் கோவிலுக்குள்போய் அவரவர் வேலைகளை பார்ப்பதுவழக்கம்.

இப்படிநடந்துவரும்காலத்தில்௸சுவாமியைபூஜிக்கிற ஒரு அர்ச்சகருக்கு 50 வயதுக்கு மேல்! அருமையாய் ஒருகுழந்தை பிறந்து அந்தகுழந்தை 5-வது வயதில் ௸ குழந்தையின் தகப்பனான குருக்கள் சாயங்காலம் பூஜைக்கு கோயிலுக்குவருங்காலத்தில் அந்தகுழந்தை நானும் வருகிறேனென்றுகேட்டுக்கொண்டதால்அந்த குழந்தையை குருக்கள் கூட்டிக்கொண்டு வந்துகோயிலில் ஓரிடத்தில் படுக்க வைத்து போட்டு அர்த்தசாமம் முடிந்தபிறகு தான் வீட்டிக்கு போகும்போது ௸ குழந்தையின் ஞாபகமில்லாமல் வழக்கம் போல் கோயிலை பூட்டி சாவியை ௸ சுவாமிகளிடத்தில் ஒப்புவித்து கொஞ்சதூரம் போனபிறகு குழந்தையின் ஞாபகம் வந்து ௸ கோவில் வாசற்படிக்கு வந்து நின்று ௸ தேசுமிக்கையனை கூப்பிட்டு தன்குழந்தையை எடுத்துக் கொடுக்கவேணுமென்று கேட்டுக்கொண்டதில் அவர் அர்த்தசாமம் முடிந்தபிறகு சக்தி திறக்

கப்படாதென்றும் காலையில் குழந்தையையெடுத்துக்கொ
ள்ளலாமென்னும் சுவாமிசொன்ன வார்த்தையை தடு
த்து மூன்று தரம் இப்போதேகுழந்தையையகத்தியம்
கொடுக்கவேணுமென்று கட்டாயமாய் சுவாமியை கே
ட்டதில் சுவாமிக்கு கோபம்பிறந்து மேல விட்டவாசப்
படிக்கு ஷை குருக்களை வரச்சொல்லி அந்தகுழந்தையை
யெடுத்து இரண்டுகாலையும் பிடித்து கப்புவேளுய் கிழி
த்து அவரிடத்தில் போட்டுவிட்டார்

குருக்கள் வியாகூலப்பட்டுக் கொண்டு திண்டல்
பத்து நாள் கழித்து கோயிலுக்கு வந்தபிறகு இந்த
சுவாமியை இவ்வளவு உக்கிரத்துடனே வைத்திருந்தால்
இனிஇருப்பவர்கள் நிர்வகிக்க முடியாதென்று ஷை
சுவாமிஉக்கிரகத்தை ஒருகும்பத்தில் கலையிரக்கி தூரங்
களில் கொண்டுபோய் ஒரு ஆலயத்தில் சேர்த்துபோட
எண்ணி ஒருநாள் அந்தப்படி ஒருகும்பத்தில் கலையிர
க்கி அர்த்தசாமம் முடிந்தபிறகு தூரங்களில் கொண்டு
போக அகாலமாயிருந்ததினல் ஷை மலைக்கோட்டை
ஈசானியபாகத்தில் விளங்கி வருகிற ஷை தேசுமிக்க
ய்யனார் கோயிலில்ஆதியாயிருந்தகன்னிமார் பக்கத்தில்
அந்தருணத்தில் அக்கும்பத்தை வைத்து போட்டுகொ
லமே வந்து அக்கும்பத்தை எடுத்து போக நினைத்து
அவ்விடத்தில்வைத்துபோனார். ஷை சுவாமி தூரங்களில்
போகமனமில்லாமல்அவ்விடத்திலேயே அந்தகும்பகட
ம்பொங்கி வழிந்து ஷை சுவாமிகளவ்விடத்திலேயே

நிலையாக இருந்துகொள்ள செய்துக்கொண்டார்.

ஷை குருக்கள் வந்து அந்த கும்பத்தை எடுத்து கொண்டு போய் தஞ்சாவூர் தாலூகா வல்லத்தில் ஊர் பெருமாள் கோயிலுக்குப்போய் மலைக்கோவில் குருக்கள் பூரணகடம் கொண்டு வருகிறாரென்று அக்கோயிலுக்கு சொல்லியனுப்ப அந்த ஸ்தலத்தார்களும் வந்து இவரை பட்டணப்பிரவேசமாய் அழைத்துப்போய் ஷை கும்பத்தை ஷை பெருமாளுக்கு அபிஷேகம் செய்து கற்பூர தீபாராதனை நடக்கும்போது ஒரு குழந்தையின் பேரில் ஆவேசம் வந்து இவன் என்ன வேலை செய்து போட்டு இவ்விடம் வந்திருக்கிறான் இந்தசங்கதி கருடஸ்தம்பத்தில் காண்பிக்கிறேனென்று உத்திரவாயிற்று

ஷை குருக்கள் காரியங்களெல்லாம் முடித்துக் கொண்டு திரும்பி அந்த கருடகம்பத்தினிடத்தில்வரும் போது ஷை தேசமிக்கையனார் ஒருவேங்கை ரூபமாய் வந்துநின்று அந்தகுருக்களை சம்காரம் செய்துபோட்டு மைத்தயாவர்களுக்கும் தான் இன்ன இடத்தில்கன்னிமார்பக்கத்தில் வாசம் செய்து கொண்டிருக்கிறேனென்று சொப்பனம் சாதித்து அப்பால்எல்லாருக்கும்தேசமிக்கையனார் கன்னிமார் பக்கத்திலிருப்பதாய் தெரிந்தது அவ்விடத்தில் ஆலயம் உண்டாக்கி மலைக்கோவிலிலிருந்து நித்தியப்படி பூஜைமுதலாகிய கட்டளைகளும் ஏற்படுத்திவைத்து மலைக்கோவில் வருஷ பிர்ம உற்சவத்திற்கு முந்தியே முதலில் எப்போதும் இந்த தேச

பிள்ளையவருக்கு காப்புகட்டி 12 நாள் உற்சவமாடி வெளிவீதி உள்வீதிகளில் சுவாமிகளை புறப்பாடுகள் திருத்தேர்நடத்திவைத்துதான் மற்ற சுவாமிகளுடைய உற்சவம் நடத்துகிற வழக்கமாயிருக்கிறது.

---

## வன்னியடி ஸ்ரீ கருப்பண்ண சுவாமிகளின் சரித்திர சுருக்கம்.

தெக்ஷிணகைலாயமென்னும் திரிசிரகிரியின் கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுகந்தகுந்தலாம்பாள்சமேத ஸ்ரீமாத்ருபூதேஸ்வரர் கோவில் சந்நிதிகம்பத்தடி கோபுரதிருவாசலுக்கு காவலாய் மேற்படி திருவாசலுக்கு வடபுறம் குன்றில் உருவம் கொண்டமைந்தும் வெகுகுடி ஜனங்களுக்கு குலதெய்வமாய் கொண்டாடி வருகிற ஸ்ரீகருப்பண்ண சுவாமிகளுக்கு நித்தியபடி சுத்த தேவதைகளுடன் சேர்த்து பூஜாதீபாராதனைகள் நடந்து வருகிறது யாவரும் அறிவார்கள்.

மேலே அர்த்தசாம தீபாராதனை முடிந்தவுடன் பாரிவேட்டையாடி வந்து விடாய்கொண்டு மேற்படி ஸ்ரீகருப்பண்ணசுவாமிகள் மேல் சொன்ன கம்பத்தடிக்கு நேராய் தங்கி காவலாயிருந்து பார்த்துவருவதாயும் ஐதீகப்படி மேற்படி மலைக்கு தென்புற அடிவாரவன்னியடி தெருவில் தங்கமைய்யர் கிரஹத்திண்ணை மண்டபத்தில் வீற்றிருந்து அநேக வரப்பிரசாத கோரிக்கைகளை கொடுத்து

## வ. கருப்பண்ணசுவாமிகள்சரித்திரசுருக்கம்

இரக்ஷித்து வரும் ஷை வன்னியடி ஸ்ரீ கருப்பண்ண சுவாமிகளுக்கு வருஷாவருஷம் மாசி மாசத்தில் அந்தத்தெருவார்கள் வழக்கமாய் ஷை தேசுமிக்கையனார்கோயிலிருந்து ஆயுதபாணிகொண்டு வந்துவைத்து தெய்வபக்தியில் சிறந்த புண்ணிய சீலர்கள் நித்திய 9-நாள் மண்டலப்படி உபயம் சிறப்பாய் நடத்திவந்து 01 நாள் சோடஷா அபிஷேக தீபாராதனைமஹா பெரிய பூஜைகள் நடத்தி 12-ம் நாள் திருக்காவேரியிலிருந்து திருமஞ்சன சந்தனக்குடமும் வரச்செய்து அன்றும் சோடஷாபிஷேக தீபாராதனை விடயாத்தி உற்சவங்களும் நடத்தி 13 வதுநாள் ஷை தேசுமிக்கையனார்கோயிலில் கொண்டுபோய் சேர்க்கை செய்து உற்சவம் பூர்த்திசெய்து வருகிறார்கள்.

இவ்வளவு பெருமை பொருந்திய தேசுமிக்கையனார் சரித்திரத்தையும் வன்னியடி ஸ்ரீகருப்பண்ண சுவாமிகள் சரித்திரத்தையும் ஷை தேசுமிக்கையனாரை பூஜித்து வரும் 87 வயதுள்ள க. தாயுமானபிள்ளையவர்கள் சுருக்கமாக சொன்னதை எழுதி தனிமையாய் அச்சிட்டும் ஸ்ரீ கருப்பண்ணசுவாமிகள்ஷை தேசுமிக்கையனார் பேரிலும் பாடிவைத்திருந்த பாடல்களில் சிலதைவாங்கி அதனையும்தனித்தனி அச்சிடலானேன்.

தி. சபாபதிபிள்ளை புக்ஷாப் திருச்சி.

8-4-47